**ஜனவரி - 23**

**"சகோதரரே அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன்." - 1 கொரி 7:24**

சில சமயங்களில் பணிகள் அல்லது கடமைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகத் தோன்றலாம். ஆனால் உண்மையிலேயே அவைகள் அப்படியல்ல. ஒரு கிறிஸ்தவனின் முதற்கடமை என்னவென்றால், தன்னுடைய எல்லா வழிகளிலும் தனது சிருஷ்டிகரையும் ஆண்டவரையும் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளுதல். இரண்டாவது கடமை என்னவென்றால், அவன் ஒரு கணவனாகவும், தகப்பனாகவும் இருந்தால் தன் மனைவிக்கும் மக்களுக்கும் கடமைகளை செய்தாக வேண்டும். அல்லது ஒரு பெண் மனைவியாகவும் தாயாகவும் இருந்தால், அவள் தன் கணவனுக்கும் மக்களுக்கும் கடமைகளை ஆற்றியாக வேண்டும். தேவனுடைய ஒழுங்கின்படி ஏற்பட்டுள்ள விவாகத்தில் கணவனுக்கு முதலில் வந்து நிற்பது, அவனுக்குக் கிடைக்கும் சிலமணி நேரங்களை குடும்பத்திற்கென்று செலவிட வேண்டும். அவ்வாறே மனைவியும் தனக்குரிய மணிநேரங்களில் முதல் வருவதை குடும்பத்திற்கு செலவிட வேண்டும். பிறருக்கு எதாவது செய்ய வேண்டுமென்று இருக்குமெனில் முதல் குடும்பத்தின் தேவைகளைக் கவனித்தாக வேண்டும். **- Z ’99, 155 (R 2488).**

இன்றைய நாளில் எங்கு பார்த்தாலும் ஓர் பரபரப்பு இருந்து கொண்டு வருகிறது. பெரும்பாலும் ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்க்கையில் ஒரு மாற்றம் வேண்டுமென்று அலைந்துகொண்டு வருகிறார்கள். கிறிஸ்தவ மக்களுக்குள் ஓர் மனதிருப்தி ஏற்பட வேண்டும். அது அவர்கள் குணங்களில் சிறப்பிடம் பெற வேண்டும். அதிருப்திகள் நிறைந்த உலகில் வாழும் இவர்கள் தங்கள் நற்குணமாகிய திருப்தியைப் பிரதிபலிக்க வேண்டும். தாங்கள் எந்த நிலையில் எங்கு இருந்தாலும் தங்களுக்குக் கிடைத்த பணிகளை திருப்தியுடன் செய்தல் வேண்டும். ஆண்டவர் ஒரு மாற்றம் அவசியம் என்பதை உணர்த்தும் வரையில், நாம் அழைக்கப்பட்ட நிலைமையிலேயே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்க வேண்டும். தேவன் பேரில் நாம் கொண்டிருக்கும் விசுவாசம் அல்லது நம்பிக்கை நமக்கு தேவனுக்கு முன்பாக அழைக்கப்பட்ட அழைப்பிலேயே நிலைத்திருக்கத் தேவைப்படும் ஆவியை அருளுவார்.

**- P ’30, 14.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

1கொரி 7:20; லூக் 3:12-14; எபே 6:5-8; ஆதி 2:15; நீதி 10:4,5; 12:11,24;13:4,11; 14:23; 20:13; 22:29; 31:27; பிர 9:10; 11:6; ரோம 12:11; எபே 4:28; 1தெச 4:11,12; 2தெச 3:10-12.

**கோபுர வாசிப்பு :** Z ’14, 212 (R 5498).

**வினாக்கள் :** என்னுடைய அழைப்பில் நிலைத்திருப்பதற்காக இந்த வாரத்தில் நான் என்ன செய்தேன்? இடையூறாக அல்லது உதவியாக இருந்தது எது? அதன் விளைவு என்ன?